Regd. No. M. 1512. வருட சந்தா ரூ. 1.

# THE INDIAN AGRICULTURE

A TAMIL MONTHLY JOURNAL DEVOTED
TO AGRICULTURE
GARDENING AND ALLIED SUBJECTS.

# இந்திய விவசாயம்

ஓர் மாதாந்தர விவசாயத் தமிழ்ப் பத்திரிகை

பத்திராதிபர்.— ஜி. கிருஷ்ணமூர்த்தி

Vol. 10. JANUARY 1931. No. 1.
மலர். 10. ஜனவரி-மீ இதழ் 1.

## பொருளடக்கம்.

பக்கம்

தேனீ வளர்த்தல் ... ... ... 1
வெட்டி வேர் ... ... ... 4
காங்கயமாட்டுக் காளைமாடுகள் ... ... 8
தமிழ் ஜில்லாக்களில் பயிரிடப்படும் நெல் வகைகளிற் சில 11
மண்ணைப் பொன்னாக்கின வேளாளன் ... 13
கலம்பகம் ... ... ... 15

MANAGER,
INDIAN AGRICULTURE OFFICE,
Teppakulam P. O.
TRICHINOPOLY.

# இந்திய விவசாயம்.

(பிரதி மாதமும் வெளிவரும் ஓர் விவசாயத் தமிழ்ப் பத்திரிகை.)

மலர் 10. 1931-ஹு-ஜனவரி-மீ. இதழ் 1.

## தேனீ வளர்த்தல்.

ஸ்ரீ. G. கிருஷ்ணமூர்த்தி.

இந்தியாவில் மலைக்காடுகளிலிருந்து ஏராளமான தேனும், மெழுகும் எடுக்கப்படுவதால் இந்த விஷயம் அதிசயமாகத்தோற்ற லாம். மேலும் நமது நாட்டில் தேன் அதிகமாக விலையாவதில்லை. மருந்துடன் சேர்த்து வருவதற்காகமட்டும் வாங்கிவரப்படுகிறது.

மேல் நாட்டில் ஒவ்வொரு விடங்களிலும் தேன் அபரிமிதமாக வாங்கப்படுவதுடன், தேன் சேகரிக்கப்படும் மார்க்கங்களும், தினே தினே விருத்தியாகிவருகின்றன. தேன் விஷயமாக பல பத்திரிகைகளும் அங்கு பிரசுரமாகி வருகின்றன. தேனீக்களை கூண்டுகளில் விட்டு வளர்த்து, தேன் சேகரிக்கும் வேலையையே அங்கு அநேகர் தொழிலாகக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்காக லாபம் சம்பாதிக்கின்றனர்.

அவர்களுக்கு தேன் வியாபாரம் என்பது ஓர் பெருந்தொழிலாக அமைந்துளது. நமது நாட்டின் செய்தி என்ன? தேன் நாட்டிலுள்ள குரும்புழுக்கள் முதலியவைகளையும் சேர்த்துப் பிழிந்தெடுக்கப்பட்டு அழுக்குகளுடன் கலந்த தேனே இங்கு கிடைப்பதாகின்றது. சில சமயம், வெல்லப்பாகுதான், தேனென கடைகளில் விற்பதைப்பெறுகின்றோம்.

மேல்நாட்டில் "இட்டாலி தேனீ" வர்க்கத்தையே சிலாக்கியமாகக் கொண்டாடுகின்றனர். இதுவே அதிகத்தேன் சேகரித்து வருவதாக விருக்கிறது.

ஏன்? இந்தியாவில் காணும் 'தேனீ' வகைகளின் கதி என்ன? என்று கேட்கலாம். இந்தியாவில் நான்கு வகையான

தேனீக்கள் இருந்து வருகின்றன. 1. மலைத்தேனீ, 2. அடுக்குத் தேனீ, 3. கொம்புத்தேனீ, 4. கொசுத்தேனீ. இதில் மலைத் தேனீ மிகவும் கொடூரமுள்ளது. இதன் கூண்டைக்கலைப்பவர்களை இது வெகுதூரம் விரட்டி ஹிம்சைப்படுத்தும். இதை அந்நிய நாட்டினரைப்போன்று கூண்டில்விட்டு வளர்க்க முடிகிறதில்லை. ஏன்? ஓர் இடத்தில் நிலையாக இராததும், சுபாபவ குணம் மாறுதலடையாமலிருப்பதுதான் காரணமாகும்.

கொம்புத்தேனீ :— இது உள்ளங்கையத்தனை ராட்டை மரக்கிளைகளில் கட்டி வருகின்றது. அதுவும் ஒரு ராட்டைக்கு மேல் கட்டுவதில்லை. ஸ்திரமாக ஓரிடத்தில் நிற்பதில்லை. ஆனபடியால் இதையும் கூண்டில் இருத்தி வளர்ப்பதற்கில்லை.

கொசுத்தேனீ :—இதனால் சேகரிக்கப்படும் தேன் ருசிப்பதில்லை. தேனும் வெகு சுவல்பம். ஆதலால் இதுவும் நீக்கப்படவேண்டியது. எஞ்சியது அடுக்குத்தேனீதான் இந்த வகையைக் கொண்டுதான் நமது நாட்டில் பல விடங்களில் பரீக்ஷிக்கப்பட்டு வருகின்றது. அயல் நாட்டினரைப்போன்று, இந்தவகை ஈக்களை வளர்த்து வருகின்றனர். தேனீக்களின் வாழ்க்கை நிலையை இங்கு இவ்வகையைக்கொண்டு உணரப்பட்டு வருகின்றது. இதனால் சேகரித்து உதவப்படும் அளவு குறைவாக விருப்பதால் மேல் நாட்டாரைப்போன்று அவ்வளவு அதிகமான லாபம் அடைய ஹேதுவில்லாமலிருந்து வருகிறது. ஒரு பெட்டியிலிருந்து, நமது நாட்டில் இந்த அடுக்குத்தேனீ வகைகளிலிருந்து, ஒரு வருடத்திற்கு சராசரி 7 ராத்தல் தேனுக்கு அதிகமாகக்கிடைத்ததாகத் தெரியவில்லை. மேல் நாடுகளிலிருந்து நல்லின ஈக்களைத் தருவித்து ஏன் நமது நாட்டில் விருத்திசெய்யக்கூடாது என்பதும் ஓர் பிரச்னை. அந்நாட்டின் சீதோஷ்ணத்தில் வழக்கப்பட்டிருந்த இவை நமது நாட்டிற்கு வருமின் புதிதான நிலைமையை சமாளித்துக்கொள்ள இயலுவதில்லை. அதனால் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. இவைகளை இங்கு தருவித்ததும், இப்புதிய இடத்தின் வசதிகளை சமாளித்துக்கொண்டு ராணி ஈ பல பெண் ஈக்களை இடுவதற்கு ஆரம்பித்தால் நமது காரியம் கைகூடிற்றெனலாம்.



இதைப்பற்றி அங்கங்கே பலரும், பரீக்ஷைகள் செய்து பார்க்க வேண்டியது அவசியமாகும். புதிது புதிதாக ஆரம்பிப்பவர்கள், நமது நாட்டில் கிடைக்கும் அடுக்குத்தேனீயை, கூண்டில் வைத்துப் பழகிய பின்னரே, அயல் நாட்டு இனங்களைக் கையாடவேண்டும், சமீபத்தில், பம்பாய் "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் J. S. பால்டரை என்பார், தான் தேனீ வளர்த்து வரும் வகையைப்பற்றி எழுதி வருகையில், இவர் அயல் நாட்டினங்கள் இந்தியாவில் பழகி அவைகளால் பெருகிவந்த சந்ததிகளைக் கொண்டு, இங்கே 1 பெட்டியில் ஏற்கனவே அவைகளின் உணவுக்கென 30 ராத்தல் அளித்தவை போக மேற்கொண்டு 60 ராத்தல் வரை தேன் இருந்ததென்றும் கூறுகிறார்.

இந்தியாவின் சீதோஷ்ண நிலை ஊருக்கு ஊர் வேறுபடுகிறபடியால் இதைப்பற்றி பரிசீலனை செய்யப்படவேண்டும். தேனீ வளர்க்கவேண்டுமென்றால் பூந்தோட்டம் ஒன்று இருக்க வேண்டுமென்பதில்லை. அந்தந்தக்காலங்களில் வெளியே கிடைக்கும் மலர்களிலிருந்தே தேன் சேகரிக்கப்படுகின்றது. மாரிகாலத்திற்கென அதிகமாக சேகரித்துவைக்கவேண்டுமென்ற இயற்கையான குணம் இந்த மேல்நாட்டு ஈக்களுக்கே விசேஷமாகவுள்ளது. ஈக்களும் வெகு அமெரிக்கையாயிருக்கும். நமது நாட்டு இனமாகும் அடுக்குத் தேனீயைப்பற்றி இவர் கூறுவதாவது:—"எல்லா பத்து சட்டங்களிலும் ராட்டை கட்டும். சந்ததி விருத்தியாக்கவல்ல ராணி ஈயும் ஏராளமாக முட்டைகளையிடும். முட்டைகளும் பொரிந்து நிறைந்த ஈக்களும் வெளியாகும். ஆனால் என்ன? அவைகள் சேகரிக்கும் தேன் அவைகளுக்குத்தான் காணும். இதை எப்பொழுது கவனித்தேன்? மேற்றிசை ஈக்கள் 60 ராத்தல் சேகரித்திருந்தபொழுதேயாகும். சிலசமயம் இந்நாட்டு ஈக்கள் ஓடிப்போயும்விடுகின்றன."

ஜப்பானிலும் இவ்வகையான அதாவது இந்நாட்டில் காணும் அடுக்குத் தேனீக்கள் உண்டு. அங்கு இவைகள் லாபகரமாகவில்லாததைக்கண்டு அவர்கள் மேற்றிசை இனங்களைப் பரவச்செய்த பின் இத்தொழில் மிக்க விருத்தியடைந்திருக்கின்றது.

ஒரு பவுண்டு அல்லது ராத்தல் இடையுள்ள சுயமான தேன் 8 அணா முதல் 1 ரூபாய் வரை நமது நாட்டில் விலைக்கு விற்கப்படுகிறது. ஒரு மனிதன் குறைந்தபக்ஷம் 12 பெட்டிகள்வரை வைத்து சுலபமாக கவனித்துவரக்கூடும். இதற்கு அதிக முதல் வேண்டியதில்லை. ஒழிந்த நேரங்களில் இதைக் கவனிக்கக்கூடும். குடியானவர்கள் இதையும் கோழி வளர்த்தலையுமே ஓர் குடிசைத் தொழிலாகச் செய்துவரலாகும். அதனால் அவர்களின் வருமானமும் அதிகமாகும்.

அடுத்த மாதம் இத்தேனீயை வளர்ப்பதெங்ஙனம்? என்பதைப்பற்றி விரிவாக எழுதப்படும்.

---

## வெட்டி வேர்.

---

ஸ்ரீ. A. V. சேதுராவ்.

மேல் நாட்டினர் தமது தோட்டங்களில், பலவர்ணங்களையுடைய வேறு வேறு வகை புஷ்பச்செடிகளை வளர்த்து அவைகள் மலர்ந்து அழகு வாய்ந்திருப்பதைக்கண்டு களிக்கின்றனர்.

ஆனால் நாம் நமது தோட்டங்களில் விசேஷமாய் வளர்க்கும் புஷ்பச் செடிகள் நறுமணம் வீசுவதாகவே யிருக்கக்காணலாம். நமது சிங்கார வனங்களில் அந்திப் பொழுதில் நாம் உலவி வருவோமானால், நறுமண வாடை வீசி மனதிற்கு இன்பத்தை உகட்டி மூளைக்கும் ஓர்வித உணர்ச்சியைத் தருவதாக விருக்கின்றது.

இவ்வித செடிகளில் சில மலர்களில் வாசனை மிகுந்திருக்கவும், சில தழைகளில் வாசமிருக்கவும், சில வேர்களில் மணம் கொண்டிருக்கவும் செய்கின்றது.

இப்படி வேர்களில் வாசம் கொண்டிருக்கும் செடியாம், வெட்டி வேர்ச் செடியைப்பற்றி நான் கவனித்தவாறு எழுதுகின்றேன்.

வெட்டிவேர் நமது பூக்கடைகளில், விநாயக சதுர்த்தி, சரஸ்வதி பூஜை போன்ற இந்துக்களின் விசேஷ பண்டிகை தினங்களில், அதிகமாக விற்றுவருவதை நாம் காண்கின்றோம். ஆனால் ரோஜா, மல்லி, சம்பங்கி இவைகளைப்போன்று அதிகமாக விற்கப்படுவதில்லை. இதன் வேரில் வாசனை யிருப்பதைத் தவிர்த்து அழகுக்காக தரிக்க வியலுவதில்லை.



இவ்வகைச் செடிகள் அங்கங்கே குறிப்பிட்ட சில ஊர்களில்தான், அதுவும் அங்கங்கு, சிறு சிறு தாக்குகளில்தான் பயிரிடப் படுகின்றன. இவ்விடங்களிலிருந்துதான் வேற்றூர்களுக்கு அனுப்பப்பட வேண்டியதாகவிருக்கின்றது. இது காரணத்தால் அநேகர் இச்செடியைப் பார்த்திருக்கமாட்டார்கள்.

ஓமவல்லிச் செடியை நீங்கள் யாவரும் பார்த்திருக்கலாம். இது சகஜமாக எங்கும் தொட்டிகளில் வைத்துப் பயிர் செய்யப்படுகின்றது.

இப்பொழுது கூறும் வெட்டி வேர்ச் செடியும் இந்த ஓமவல்லியை ஒத்திருக்கின்றது. இச்செடியைப் பார்த்தவர்கள் உடனே ஓமவல்லி என்றே சொல்லி விடுவார்கள். ஆனால் கவனித்தால் சில வித்தியாசங்கள் உடனே காணலாம். ஓமவல்லியின் தண்டும், இலையும் ஓர் வெளிறின பச்சை நிறமாக இருக்கின்றது. இலையைத் தின்றாலும், ஓமத்தின் காரத்தையும் வாசனையையும் சிறிது ஒத்திருப்பதுடன், ஓர் ருசியையும் கொண்டிருக்கின்றது. பின்னும் இதற்கு வேர் அதிகமாக ஓடுவதில்லை. இலையும் ரசம்மிகுந்து தடித்திருக்கின்றது. ஆனால் வெட்டிவேரின் தண்டும் இலையும், ஊதா நிறமாகவும் தழை கசந்தும், அதிக ரசமில்லாமலும், வேர் அதிகமாக பெருகிவரும் குணம் வாய்ந்துமிருக்கின்றது.

தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை எல்லா ஜில்லாக்களிலும், அங்கங்கே துண்டு நிலங்களில் இது பயிரிடப்படுகிறது. நமது தென் ஜில்லாக்களில் எங்கும் பயிரிடலாகும் எனச் சொல்லலாம். ஆனால் மண்ணின் தன்மைமட்டும் கவனிக்க வேண்டியதே. இதன் வேர்கள் நன்றாய் பூமியில் ஓடிப்பரவவும், வேர்களின் விருத்திக்கும், செடியின் வளர்ச்சிக்கும் வேண்டிய உணவுப் பொருள்களுடன் அமைந்துள்ள, வண்டல் படிந்த மிச்ரம மண்ணுள்ள நிலமே சிலாக்கியம். சிலவிடங்களில் மண்ணின் தன்மையை மாற்ற சாம்பலையும், குளத்து வண்டலையும் நிலங்களுக்கு அடிப்பதுண்டு.

கோடையில் நன்றாக நிலத்தைக்கொத்தி, கட்டிகளை உடைத்து மண்ணை பொல பொலப்பாக வைத்திருக்கின்றனர். வைகாசி மாதத்தில் இந்த நிலத்தை சுமார் 3 அடி அகலமும் $7\frac{1}{2}$ அடி நீளமுமான சிறு பாத்திகளாகப் பிரிக்கின்றனர். இப்படி பிரிக்கப்படும் பிரதி பாத்தியிலும் இருவரிசையாக பத்து துவாரங்களில் இந்த வெட்டிவேர்ச் செடியின் பதியன்களை இரண்டிரண்டாக நடவேண்டும். இச்சமயம் சில விஷயங்கள் சொல்ல வேண்டியிருக்கின்றது. இந்த வெட்டிவேர்ச் செடிகளுக்கு

பூவாகிலும் காயாகிலும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகையால் இவைகளைப் பதியன் நட்டே வளர்க்கவேண்டும். ஏற்கனவே நிலத்தில் வளர்த்துள்ள தோட்டக்காரர்களிடமிருந்து, அவர்கள் இவைகளின் வேர்களை தோண்டுவதற்கு முன் வெட்டி எரிவதிலிருந்து கொண்டுவந்து நடலாம். அடித்தண்டு மிகவும் முதிர்ந்து இருக்குமாதலால் மேல்உள்ள அதிக இளசும் முதுமையுமல்லாத பாகத்தில் கத்தியால் தரித்து அப்படியே அவைகளிலுள்ள இலைகளை நீக்காமலேயே நடலாம். இங்கு சொல்லும் விஷயம் ஒன்றிரண்டு இடங்களில் நான் கவனித்து வந்ததும், அதை யநுசரித்து நான் நட்டுப் பார்த்ததையுமே யாகும். மேலே கூறிய படி நட்டாலே போதுமானது. வேரும் பிடித்து வருகின்றது. வெளியூருக்கு இப்பதிகங்களை எடுத்துச் செல்லவும் கூடும். வெட்டிய இரண்டு தினங்கள் கிரமித்தும் நான் நட்டுப்பார்த்திருக்கின்றேன். ஆனால் அப்படி தாமதித்து நடுகையில், நடவேண்டிய பாகம் உலர்ந்திருக்குமானால் சிறிது இடம்விட்டு, மேல் நறுக்கிய பிறகே நடவேண்டும். பயிரும் வேர் பிடித்துக் கொள்ளுகிறது. இந்தச் செடியின் இலையை ஒடித்து காம்பில் கொஞ்சம் சிவி மண்ணில் நட்டால் அதிலிருந்தும் சிறு வேர்கள் ஓடி வருகிறது. ஆனால் இப்படி நடுவதில் பயனில்லை. முன் கூறியபடி பாத்தியில் நடுவதிலும் சிலர் நிலத்தில் எருக்குப்பைகளைப் போட்டு, பாத்திகளுக்குப்பதிலாக அதே அளவினதாய் மேடைபோட்டு அதில் நடுவதுமுண்டு. ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கும் ஒரு முழம் இடைவெளிவிட்டு நடலாம்.

இதன் பதியன்களை விலை கொடுத்து வாங்குவதாகத் தெரியவில்லை. அங்கங்கேயுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் இலவசமாகவே கொடுத்துக் கொள்ளுகின்றனர். விலைக்கு வாங்குவதானால் ஒரு பாத்தியில் வெட்டி எடுக்கப்படும். பதியன்களை இரண்டணாவுக்கு வாங்கலாம். இதற்கு வைகாசிமாதந்தான் பட்டமென்பதில்லை. ஒவ்வொரு மாதத்திலும் சில பாத்திகள் நடப்படுகின்றன.

பதியன்கள் நடும் அன்று ஒரு தண்ணீர் பாய்கின்றது. இப்படி 5, 6 நாள்வரை அதாவது வேர் பிடிக்கும்வரை தினமானம் ஒரு தண்ணீர் பாய்ச்சவேண்டும். பின்னர் ஒன்றுவிட்டு ஒருநாள் செடிகளின் இருப்பையறிந்து ஜலம் விடவேண்டும். பதினைந்து நாட்கள் கழித்து மண்ணைக் கொத்திவிடவேண்டும். அப்படிச் செய்வதால் பூமி பொலபொலத்திருக்கும். அன்று தண்ணீர் விடாமல் காயவிட்டு மறுநாள் தண்ணீர் விட



வேண்டும். ஐம்பது நாளில் செடிகள் துளிர்விட்டுச் செண்டுபோல் வளர்ந்து ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டிருக்கும். இது சமயத்தில் மேலாகக் களைக்கொத்தினால் கொத்தி வண்டல் மண்ணும், சாம்பலும் கலந்து பாத்திகளில் பரவிவிடுகின்றனர். இப்படிச் செய்தபின்னர், இதன்மேல் ஒருவரையும் மிதிக்கவிடுவதில்லை. களையெடுப்பதெல்லாம் பாத்தி வரப்பிலிருந்தே செய்யவேண்டும். பின் தண்ணீர் விடுவதெல்லாம் செடியின் இருப்பையறிந்து செய்யவேண்டும்.

இப்படி நட்ட 3 மாதத்திலிருந்து 5-மாதம் வரை தேவைக்குத் தக்கபடி வெட்டியெடுத்துவரலாம்.

இதன் வேரைக் களைத்து எடுப்பதெப்படி? இந்த விஷயம் அவசியம் கூறவேண்டியதே. பாத்திகளுக்கு சமீபத்தில் தண்ணீர் பாயும் கால்களை முழங்கால் ஆழத்திற்கு பாத்திக்கருகிலும், பாத்திகண்ட நீளத்திலும் வெட்டவேண்டியது. பாத்தியை ஒட்டிய வரப்பும் எடுபட்டு ஆழமாக்கப்படவேண்டியதே. இப்படி வெட்டிய கிடங்கில் தண்ணீர் நிரப்பிக்கொள்ள வேண்டும். பின்னர் பாத்தியிலுள்ள வெட்டிவேர்ச் செடிகளின் பூமியின் மேல் பாகத்தில் தரித்து எடுத்து வேறு இடங்களில் நட உபயோகித்துக் கொள்ள வைத்துக்கொள்ளலாம். இப்படி வெட்டிய சட்டைகள் இருக்குமிடத்தில் கிடங்குகளிலுள்ள தண்ணீரை குடத்தில்மொண்டு அவைகளின் மேலும், ஒரு தூருக்கும், மற்றொரு தூருக்கும் இடையிலும் ஊற்றி, மண்ணைக் கரைத்து கிடங்கில்தானே கரைந்து வருமாறு ஊற்றிக்கொண்டு வரவேண்டும். இப்படிச் செய்வதால் வேரிலுள்ள மண்கள் அலசப்பட்டுவிடுகின்றது. பின்னர் ஓர் சிறு குச்சியால் தூரின் பக்கத்தில் மெதுவாகக் குத்தித்தள்ளி எடுத்தால் அப்படியே வேருடன் நீக்கிவிடலாம். இப்படியே அன்றாடம் விற்பனைக்கு ஏற்றவாறு ஒருபாத்தி அல்லது அதற்கு மேல் பாத்திகளிலிருந்தோ வேர்கள் எடுக்கப்படுகின்றன.

இப்படி எடுக்கப்படும் தூர்கள் மூன்றிலிருந்து சுமார் 2 வீசை வேர்கள் கிடைக்கின்றனவாம். இளவயதில் வெட்டி எடுத்தாலோ 4 தூருக்கு ஒரு வீசைதான் நிற்குமாம். ஒரு வீசை வேர் கிராக்கிக்குத் தகுந்தபடி எட்டணாமுதல் முக்கால் ரூபாய் வரை விற்கப்படுகின்றது.

அதிகப்படியான நாட்களுக்கு இந்தச் செடி மண்ணிலேயே இருந்தால் வேரை மண் தின்றுவிடுகிறதென்று அவர்கள் 4-மாதத்திற்குமேல் ஆனதும் எடுத்து வேரைக் காயவைத்து வைக்கின்றனர். காய்ந்த வேர்களை தைலமிறக்கவும், மருந்திற்கும், விசிறிகள், தட்டிகள் இவைசெய்யவும், வாங்கிப்போகின்றனர்.

# காங்கயநாட்டுக் காளைமாடுகள்.

ஸ்ரீ Y. S. ஜெகதீசன்.

காங்கயநாட்டு காளைமாடுகள் பாரமிழுக்கும் சக்திவாய்ந்தனவென்பது எங்கும் பிரபல்யம். ஜான்ஷார்ட் துரையவர்கள் "மேற்கண்ட வர்க்கத்தியதில் நன்றாகப் போஷிக்கப்பட்ட ஒருஜோடி மாடுகள், ஆங்கிலேயா தூகலப்பையை சுளுவாய் இழுத்துவரக்கூடியதாயிருக்கின்றது. இவைகளைக் கட்டி உழுவதால் பூமியில் 9 அங்குலம் ஆழம் மண் பிரட்டப்படுகின்றது. ஒத்தை வண்டியில் கட்டினால் அரை டன் பாரம் இழுக்கும் அல்லது 108 காலன் கொண்ட தண்ணீர் பீப்பாய் வண்டியை ஒத்தையாகவே இழுக்கும். இரட்டைக் கபிலையிலோ ஒவ்வொன்றும் தினம் ஒன்றுக்கு 6 டன் தண்ணீர் இறைக்கவல்லது." எனக்கூறுகின்றார்.

காங்யத்தைச் சுற்றிலுமிருந்து இவைகள் வருவதால் அவைகளுக்கு இப்பெயர் உண்டாயிற்று. இவைகள் தாராபுரம் தாலுக்கா பூராவிலும், இதையடுத்துள்ள ஈரோடு, கரூர், பல்லடம், பழனி, திண்டுக்கல் இந்த தாலுகாக்களின் ஓர் பகுதியிலும் வளர்க்கப்படுகின்றன. ஆனால், தாராபுரம் தாலுக்காவைச் சேர்ந்த காங்கயம் வட்டத்தில்தான் இதன் உண்மையான வளர்ச்சி ஏற்படுகின்றது. இங்கு கூறிய எல்லா தாலுக்காக்களிலும் சிரத்தை எடுப்பின் ஏன் வளர்த்துவரவியலாது? சுத்தமான கலப்படமற்ற வர்க்கம் பழையகோட்டை பட்டகாரிடம் இருப்பவைகள்தான். இதைப் போன்று இந்தக் காங்கயம் வட்டத்தில் எங்கும் காணமுடியாது. நல்ல பசுக்களையும், காளைகளையும்கொண்டே இவர் இந்த வம்ச விருத்தியை பரிபாலித்துவருகின்றார். இவர்தான் இந்தவட்டத்தில் ஏராளமான மாடுகளை போஷித்துவருபவர். இவரது மாடுகளுக்கெல்லாம் பட்டக்காரர் மாடுகளெனச் சொல்லப்படுகின்றன.

இதில் இரண்டுவகைகள் உண்டு. ஒன்று பெரிது, மற்றொன்று சிறிது. இந்த இரண்டு வகைகளையும் இங்கு அடுத்தடுத்துப் பார்க்கலாம். பெரியமாடுகள் வேண்டுமென்றால் பட்டகாரிடந்தான் போகவேண்டும்.



காங்கயம் மாடுகள் நல்ல உழைப்பாளிகள். சுறுசுறுப்புள்ளவை, குறுகியதும், தடித்துமுள்ள கழுத்தும் கால்களும் கொண்டது. கவலையிறைப்புக்கும், ஆழ உழுவதற்கும், பாரம் இழுப்பதற்கும் வகையானது. தெற்கே கரிசல் காடுகளில் உழ இவைகளே உதவுகின்றன. பத்து வருடத்திற்கு மேலேயே வேலைசெய்து வரக்கூடியது. நமது நாட்டின் வேளாண்மை செழித்துவர இந்த இனம் விருத்தியாகிவருவது மிகவும் முக்கியம்.

பின்னும் இந்த மாட்டின் லட்சணத்தைப்பற்றிக் கூறுவோம். சொகுசான பார்வை; படர்ந்த முகம்; அதிக நீளமில்லாமலும், தடித்தும் நுனி கூர்மையாகவுமுள்ள கொம்புகள்; பருத்துக் குறுகிய கால்கள்; கட்டுள்ள திரேகம்; விரிந்த மார்பு; அதிகமாகத் தொங்காத அதள்; துரித நடை இவைகள் யாவும் அமைந்துள்ளது.

இப்பொழுது காங்கய நாட்டைப்பற்றிக் கவனிப்போம். இப்பாகம் கிழக்கில் காவேரி நதியை நோக்கி மேடும், பள்ளமுமாகச் சரிந்து செல்லும் பிரதேசமேயாகும். காங்கயத்தின் அருகில் நதி உற்பத்திஸ்தானமொன்று அமைந்து அதிலிருந்து ஜலம் வடக்கில் நொய்யலாற்றிலும், தெற்கில் அமராவதியிலும் ஓடி விழுகிறது. இந்தப் பூமியோ சுண்ணாம்புச் சரளைமண். இங்கு மேய்வதற்கு காடுகள் கொஞ்சமே. ஜீவனத்திற்கு இவர்கள் பட்டா நிலத்தில் ஒதுக்கிய ஒரு பாகத்தில் சோளம் பயிரிடுகின்றனர். இந்த நிலங்களுக்கு கிணற்றிலிருந்து இறைத்து ஜலம் பாய்ச்சப்படுகின்றது. ஊர்க்காலிகளுடன் கலந்து மேயாமல் அவரவர்களது மேய்ச்சல் பூமியிலேயே வேலிக்குள் மேய்வதால் கலப்படமேற்படுவதற்கில்லை.

இந்த மாடுகளை ஓங்கி வளரச்செய்யும் மண்வளம் என்ன? அதிகமான சுண்ணாம்புகொண்ட ஏராளமான மேய்ச்சல் தரையே காரணம். மாடு மேய்வதற்கு செம்மண்சரளை பூமியே சிலாக்யமென சிலரது அபிப்பிராயம். "ஓடை ஜல்லி" என இவ்வித நிலத்திற்கு இங்கு சொல்லப்படுகிறது.

வேலிக்காக கிளுவை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இவை ஓங்கி வளர்ந்து பைசாசக்காற்று அடிக்காவண்ணம் மாடுகளைக் காக்கின்றன. முற்கூறிய நிலத்தில் சோளம், கம்பு, கொழுக்கட்டைப்புல் இவை போடப்படுகின்றன. கொழுக்கட்டைப் புல்லின் விதைகளை ஆழமாக விதைத்தால் முளைப்பதில்லை. மேலாகத்தான் தெளிக்கப்படுகின்றன. மழையின் உதவியால் வேரூன்றிக் கொள்ளும். கிழங்குவேர்கள் உண்டாகிவிட்டால் தண்ணீர்த் தட்டை தாங்கிக்கொள்ளும், ஒவ்வொரு மழைக்கும் புதிதாகவும் ஏராளமாகவும் இவை கிளைத்து வருவதும், நிரந்தரமாகவே புற்களைத்தருவதும் இதுவேயாகும். பளையகோட்டை பட்டாகார் அல்பல்பா அல்லது லூசர்ன் என்னும் பூண்டை சுவல்ப விஸ்தீர்ணத்தில் விதைக்கிறார். இது பசுமாடுகளுக்கு மிகவும் ஏற்றது. பால் விருத்தி உண்டாக்கும். வேர்கள் ஆழமாகச் சென்று தண்ணீர்த் தட்டை தாங்கிக்கொள்ளச்செய்யும். 10 வருட காலம் வரையிலும் இருக்கச்செய்யும். ஆனால் கோடையில் வாரம் ஒரு முறை தண்ணீர் விடவேண்டும்.

இப்பிரதேசங்களில் மேயும் மாடுகளுக்கு பனியினின்றும், மழையினின்றும் காப்பதற்கு சரியான பந்தோபஸ்து கிடையாது.

பட்டகார்வசம் கறவை மாடுகளுக்கென எப்பொழுதும் ஒரு பொலிகாளை இருந்துவரும். பசுக்கள் காளைக்குக் கத்தும் சமயம் அதிக தாமதமின்றி உதவப்படுகின்றது. பொதுவாய் காங்கயம் பசுக்கள் கன்று போட்ட மூன்று அல்லது நான்காவது மாதத்திலேயே சினைப்படுகின்றது. சில பசுக்கள் தன் கற்பகாள் முழுவதுமே பால் சுரந்துவருவதுண்டு. ஆனால் இப்படி விடக்கூடாது. 2 மாத காலத்திற்கு ஓய்வு கொடுக்கப்படவேண்டும்.

இப்பக்கத்து பசுமாடுகள் கறவைக்கு இலாக்கியமானதல்ல. இவைகள் பால் வற்றிய சமயங்களில் இப்பிரதேசங்களில் கவலைக்கும், உழவுக்கும் உபயோகப்படுகின்றது. ஆனால் இவைகளுக்கு குறைவற்ற போஷணை எப்பொழுதும் கிடைத்து வருகிறது.

வருடமொருமுறை சித்திராபௌர்ணமியன்று கூடும் கண்ணபுரம் சந்தைக்கு முதல்தரமான மாடுகள் கொண்டுவரப்படுகின்றன.



இதில் கழிவுபட்ட மாடுகளே பின்னர் திருப்பூரில் கூடும் சந்தைக்கு வருகின்றது.

முடிவில் நான் சொல்லக்கூடியது ஒன்று. நமது எளிய கால்நடைகள் க்ஷீணித்துப்போகாமலிருக்கவும், நமது பண்ணை வேலைகள் பூராவும் குந்தகமில்லாமல் நடைபெற்று வரவும், நமது தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு பெரிய மிராசுதாரர்களும், ஜமீன்தாரர்களும் இத்தகைய மாடுகளை விருத்திசெய்ய முயல வேண்டும். நவீனவிசை யந்திரங்கள் தோன்றும் இக்காலத்தில் கொடும் நோய்களால் ஒருபுறம் நமது கால்நடைகள்மரித்து வருவது நிற்க, இவர்களும் அசட்டையாக விருந்தால் தென்னிந்தியாவில் முதல்தரமான வர்க்கம் இருப்பது நாளடைவில் குறைவதைப் பற்றி கேட்கவேண்டியதில்லை.

---

## தமிழ் ஜில்லாக்களில் பயிரிடப்படும் நெல் வகைகளிற் சில.

---

ஸ்ரீ V. R. கோபால் ராவ், பி. ஏ., பி. எல்., அட்வகேட்.

"நெல் வகை எண்ணினாலும் புல் வகை எண்ணலாகாது" என்ற பழமொழிக்கிணங்க நெல்லில் ஏராளமான வகைகள் இருந்து வருகின்றன. இவைகளைப்பற்றி விரிவாக பெயர் வாரியாகத் தொகுத்து இந்தியாவிலிருக்கும் பல வகைகளையும் அறிந்தவரையில் சிறுகுறிப்புடன் இந்தியா கவர்ண்மெண்டாரால் 1910-ம் வருடம் (Agricultural Ledger 1910 No. 1 Oryza Sateiva) 'நெல்' என்னும் தலைப்புடன் ஓர் புத்தகம் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தில் வட நாட்டில் காணும் நெல் வகைகளே விசேஷமாகக் காணப்படுகின்றது. நமது தென்னாட்டில் காணும் வகைகளைப்பற்றி தனித்து புத்தகமாக பிரசுரிக்கப் படாவிடினும் அங்கங்கே பல புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும், ஜில்லா நிகண்டுகளிலும் (Gazetteers) பரவிக் கிடக்கின்றது. இவைகளைக் கணித்து 'இந்திய விவசாயத்'திற்கு எழுதியனுப்ப பத்திராதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் தொகுத்தெழுத முயன்றிருக்கின்றேன்.

‘நெல்’ வகை பொதுவாய் கார்-பிசானம் என்றும், கார்-சம்பா வென்றும், கோடை-மாரி என்றும் காலத்தையும் பட்டத்தையும் அநுசரித்து இரண்டு இனங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கார் இனங்கள் மட்டமானதும் சம்பா இனங்கள் மேன்மையானதுமாகும். இதைத் தவிர்த்து தண்ணீர் கட்டுமிடங்களுக்கு ஏற்ற நெல் வகைகள் என்றும், களர் நிலங்களுக்கேற்ற வகைகளென்றும், மானாவாரியில் பயிர் செய்யக் கூடிய வகைகளென்றும், வாசனை கூடிய வகைகள் எனவும் பலவிதமாக நெல் வகைகள் ஏற்பட்டும் இருக்கின்றன. இத்தியாதி விவரங்கள் கூடிய வரையில் கொண்டதாக எழுதி வருகின்றேன்.

அவசர சம்பா.— திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூர் தாலுகாவைச்சேர்ந்த அம்மாபுரம் பக்கங்களில் தேரி நிலங்களில் இந்த நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. விதைத்த 75-நாளில் அறுவடைக்கு வந்து விடுகிறது. அரிசி சிகப்பு. உமியும் பழுப்பு வர்ணம். இதற்கு வயலில் தண்ணீர் கட்டுவதில்லை. கேழ்வரகுக்கு ஒப்பர்தம் இறைத்துப் பாய்ச்சப்படுகின்றது. ஏப்ரல் மாதம் கடைசியில் விதைக்கப்படுகிறது.

அரியான்.— 6-மாதத்து வித்து, பெரிய அரிசி; மட்டை; சிகப்பு நிறம், சிவகிரி, ருமணதபுரம் பக்கங்களில் பயிரிடப்படுகின்றது. குளத்து உள்வாய் நீர் பிடிப்பு நிலங்களுக்கு இது ஏற்றதாகக் கருதப்படுகின்றது.

அறுபதாங்குறுவை.— இது 85 முதல் 90 நாளில் அறுவடையாகிறது. ஜலம் குறைவாகக் கிடைக்கக்கூடிய எல்லா விடங்களிலும் இது நடலாம். தஞ்சை ஜில்லாவிலும், மதுரை ஜில்லா உத்தமபாளையம், வடகரை பக்கங்களிலும் பயிரிடப்படுகின்றது.

அரிக்கிராவி (வெள்ளை).— சிவகிரி பக்கங்களில் புஞ்சையில் பயிரிடப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் நடப்படுகிறது. 6 மாத வித்து கவர்ண்மெண்டார் பிரசுரமாகும் “சிவகிரி பண்ணை” எனும் புத்தகத்தில் இதன் அரிசியும் நெல்லும் சிகப்பு என்று கூறப்படுகின்றது. ஆதலால் இருவகை யிருப்பதாகத் தெரிகிறது. களர் நிலத்திற்கேற்றதாம்.

அறுவதாங்கோடை:—6 மாத வித்து மதுரை ஜில்லாவில் பயிராவது. புஞ்சையில் அதிக மழையில் விளைந்துபோகும். ஆவணி-புரட்டாசி இதற்குப்பட்டம்.

அழகிய மணவாளன்:— உடுமலைப்பேட்டை பக்கங்களில் நீர் பிடிப்பு நிலங்களில் பயிராக்கப்படும் ஓர்வகை.



அனந்தன் சம்பா:— இதற்கு ராமன் சம்பா என்றும் காடைக்கழுத்தான் என்றும் சொல்லப்படுகிறது. நாற்று 40 நாள். மார்கழியில் அறுவடையாகத் தக்கவை. தஞ்சையிலும் திருச்சியிலும் விளைவது. 5 மாத வயது.

அநஞ்சோதி:— நல்ல மேனி காணும் வகை.

அன்னதானக்குறுவை:— ஆனி 10-ல் விதைப்பு ஆரம்பித்து 30, 35 நாளில் நடுவது. அற்பசியில் அறுவடையாகும்.

அறுவதாம் வெள்ளை.-எந்தப் பட்டத்திலும் விதைக்கலாம். விதைத்த 75 நாளில் அறுக்கக்கூடியது. அரிசியும் நெல்லும் வெண்மை.

(தொடரும்.)

---

## மண்ணைப் பொன்னாக்கின வேளாளன்.

---

என் தகப்பனார் சொல்ப சொத்தைக் கொண்டவராயிருப்பினும் அவர் உழவு தொழிலில்தான் அதிகப்பிரியமுள்ளவர். எங்கள் குலம் வேளாளர் குலம். வேளாளன் பயிர்த்தொழில் புரிவது இயற்கையே எனினும் தற்கால நாகரீகத்தில் வேளாளர்களில் பயிர்த்தொழில் செய்வதைக் கேவலமாக சிலர் எண்ணுகிறார்கள். அப்படி நினைத்ததில் நானும் ஒருவன். என் பிதாவுக்கு நான் ஒரே பிள்ளை. என்னை அன்புடன் வளர்த்து, தற்கால நாகரீகக் கல்விச்சாலையில் படிக்கவைத்தார். தற்கால நாகரீக உடையில் எனக்கு அதிக அவா. ஆகையால் என் நண்பர்களும் என்னுடன் படித்த மாணவர்களும் என்னை நாகரீகப்பித்தன் எனக்கூப்பிடுவது வழக்கம். எனக்கு 22-வயது நடக்கும் பொழுது நான் B A, முதல் வகுப்பில் படித்து வந்தேன். அச்சமயம் என் தகப்பனாருக்கு, சொத்தின்மேல் கடன்வாங்க நேரிட்டுவிட்டது. காரணம் என்னவெனில் என்னைப்படிக்கவைத்ததே. நான் கடனைப்பற்றி கனவிலும் எண்ணுவதில்லை. ஏனெனில் B.A. பாஸ் செய்துவிட்டால் ஓர் பெரிய வக்கீலாகவோ அல்லது ஜட்ஜாகவோ வந்தால் சுலபத்தில் கடனைக்கட்டிவிடலாம் என நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. என்னுடைய பிடிவாதத்தால் என் பிதா B A. வரை

யிலும் படிக்க வைத்தாரேயன்றி அவர் சந்தோஷத்துடன் படிக்க வைக்கவில்லை. என் பிதா நான் 10-வது வகுப்பு (VI Form) படித்தால் போதுமென்றும், பிறகு ஏதாவது கைத்தொழில் பழக வேண்டுமென்றும் அடிக்கடி சொல்லுவார். ஆனால் இவர் சொல் எனக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. இங்ஙனமிருக்க நான் B. A. இரண்டாவது வகுப்பில் படிக்கும்போது கல்கத்தாவுக்கு உதைபந்தாட்டத்திற்கு (Foot Ball Match) சென்றிருந்தேன். உதைபந்தாட்டத்தில் தோல்விஎன்பது ஒருபக்கம் எப்பொழுதும் உண்மையே, இல்லையேல் இரண்டுகட்சியும் சிலசமயங்களில் சமமாயும் இருக்கும். கல்கத்தா வாசிகளுடன் போட்டி போட்டு உதைபந்தாடின சென்னை வாசிகள் தோற்றுவிட்டார்கள். சென்னையினின்று கல்கத்தா சென்று உதைபந்தாடி தோற்றது எனக்கு அதிகக்கவலையை உண்டுபண்ணிவிட்டது. நான் தனிமையாக ஓர் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு அதிக விசனத்துடன் இருந்தேன். என் விசனக்குறியைக்கண்ட ஓர் வங்காள இளைவன் என்னிடம் வந்து "என்ன, மதராஸ் வீரரே! நீங்கள் மண்ணைப்பொன்னாக்க மனோராஜ்ஜியம் செய்கிறீர்போல் தோன்றுகிறது" என்று கூறினான். உடனே நான் அதிக வெட்கமடைந்து அன்றிரவே சென்னை மெயில் ஏறி சென்னைவந்து சேர்ந்தேன். சென்னை வந்ததும் 100 ரூபாய் சம்பளத்தில் ஏதாவது ஓர் வேலை கிடைக்குமா என எண்ணி 300 ரூபாய் வரையிலும் செலவுசெய்து கடைசியில் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக ஓர் குமஸ்தாவேலையாவது கிடைக்குமென 6 மாதம் பிரயத்தனப்பட்டும் கிடைக்கவில்லை. ஆ! நாகரீகக்கல்வியின் மகிமையை என்னென்று சொல்வது! என்னைக்காப்பாற்றிக்கொள்ளக்கூட என்கல்வி பயனற்றதாய் முடிந்ததே என எண்ணி எண்ணி என் மனமும் பைத்தியம் பிடிக்கும் தருவாயில் வந்துவிட்டது. என்னிலையை உணர்ந்த என்பிதா "நமக்குச் சொல்பமாயுள்ள நிலத்தையேனும் நீ உழுது பயிர்செய்தால் நம் கடனும் நீங்கி நாமும் கொஞ்சம் சௌக்கியமடையலாம்" எனச்சொன்னார் இதையேற்றுக்கொண்டு உடனே உழவுதொழிலில் ஈடுபட்டேன். என தோட்டத்தில் பலவித கனிவர்க்கங்களும், மிளகாய், புகையிலை முதலியவைகளும் வைத்துப்பயிர்செய்



தேன். வேளாண்மைத்தொழிலில் ஈடுபட்டநாள்முதல் எனக்கு மனோவியாகூலம் சிறிதும் ஏற்பட்டது கிடையாது. என் தோட்டத்திலுள்ள பழவகைகள் வாரமொன்றுக்கு 10 ரூபாய்க்கு விற்பனையாகும். இதிலிருந்து மூன்று வருடத்திற்குள் எங்கள் கடனையும் தீர்த்துவிட்டோம். கடன் தீர்ந்தபிறகே வங்காள வீரன் சொன்ன மண்ணைப்பொன்னாக்கிய கனவு உண்மையாயிற்று. என்னுடையதோட்டம் நாளுக்குநாள் நல்ல விருத்தியை அடைந்து வந்தது. இங்ஙன மிருக்க என்பழய வங்காளநண்பர்களை என் தோட்டத்திற்கு ஒரு நாள் கூட்டிக்கொண்டுவந்து உங்கட்கு இஷ்டமான பழங்களைப் பரித்து சாப்பிடுங்கள் என்று சொன்னேன். அச்சமயம் ஓர் வங்கவீரன் "உதைப்பந்தாட்டத்தில் சொன்ன விளையாட்டுச்சொல் இன்று தாங்கள் செய்கையில் காண்பித்து மண்ணையும் பொன்னாக்கி எங்கள் முன்னிலையில்காண்பித்தீர்கள். இனி நாங்களும் எங்கள் முன்னோர்கள் செய்த உழவுத்தொழிலைக்கைக்கொண்டு மண்ணைப்பொன்னாக்கி மனக்கவலையைநீக்கி சுதந்தரத்துடன் வாழ ஆசைகொள்கிறோம். உங்கள் நன்றிக்கு எங்கள் வந்தனம் உரியதாகுக" என்றான். வேளாண்மைபோ விசனமற்றதொழில். இனியேனும் ஆங்கிலக்கல்வியில் உயர்ந்தபட்டம் பெற்றாலும் எங்ஙனம் உழவுதொழில் செய்வது என்று, 20 ரூபாய் உத்தியோகம் கிடைத்தாலும் போதுமே என்ற எண்ணத்தைவிட்டு வேளாண்மையைக் கைக்கொண்டு, மண்ணைப்பொன்னாக்கி துன்பம் நீங்கி இன்பமடைவார்களாக.

(வேளாளமித்திரன்)

## கலம்பகம்.

முருங்கைக்காயின் உலர்ந்த விதையின் பருப்பு ஓர் சிறந்த தாதுபுஷ்டி அவுஷதம். அல்லாமலும், இதிலிருந்து "பென் ஆயில்" என்னும் ஓர்வித விலையுயர்ந்த எண்ணெயை எடுக்கின்றனர். இந்த எண்ணெய்க்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கிராக்கி அதிகம். விலை உயர்ந்த கடியாரங்களுக்கும் பியானோ முதலிய வாத்தியப் பெட்டிகளுக்கும், சக்கரங்களிலும், சில்களிலும்,

இந்த எண்ணெயை உபயோகப்படுத்துகின்றனர். முருங்கைக் காய்க்கு அதிகக்கிராக்கி இருப்பதால், அனேகமாய் இந்த விரை எண்ணெயாடக் கிடைப்பதில்லை. ஆனால் இந்த முருங்கையிலேயே "காட்டு முருங்கை" என்று ஒருஜாதி உண்டு. அதன் காய்கள் உண்ண உதவா, அந்தக்காயின் விதைகளில்கூட இதேமாதிரியான சீக்கிரம் உலர்ந்த "பென் ஆயில்" கிடைக்கும். கர்நூல் காடுகளில் இந்த முருங்கை அதிகமாய் உண்டு.

*(P. S. P. in the "Swadesamittran")*

முருங்கைவேரை ஐரோப்பியர் மிகவும் விரும்பி உண்கின்றனர். அந்தவேர் கொஞ்சம் முள்ளங்கிவாசனை பொருந்தியதாயும் காரமாயும்இருக்கும். ஜீரணசக்தியை விருத்திசெய்யும். ஐரோப்பாவில்குதிரை முள்ளங்கி எனப் பொருள்படும். "ஹார்ஸ் ராடிஸ்' என்னும் ஒரு கறிஉண்டு. முருங்கை வேருக்கும் அதன் உருசியும் குணங்களும் உண்டெனக் கூறப்படுகின்றது.

ஐரோப்பியர் உண்பதுபோல் முருங்கையின் வேரை ஊறுகாய் முதலியவைகள் போட்டு உண்ண விரும்பினால் முருங்கை விரையை மார்ச்சு ஏப்ரல் மாதத்தில் விதைக்கவேண்டும். சரியாய் நீர் பாய்ச்சி வந்தால் அடுத்த ஆகஸ்டு செப்டெம்பர் மாதத்தில் இந்த இளஞ் செடிகளின் வேரை அறுத்தெடுத்து 'இண்டியன் ஹார்ஷ் ராடிஷ், என உபயோகிக்கலாம். அனேகர் இப்படி இந்தவேர் உணவுக்கு வேண்டுமானால், வருஷாவருஷம், விதைபோட்டுப் புதிதாய்ச் செடியை வளர்க்கின்றனர். இரண்டு மூன்று வருஷம் சென்ற முருங்கை மரங்களின் வேர்கள் கட்டைபோல் இருக்கும்.

*(P. S. P. in the "Swadesamittran")*

---

கோவில்பட்டி சர்க்கார் பண்ணையில் பருத்தி பயிரிடும் செலவு:- ஆங்கிலத்தில் பிரசுரமாகும் "சென்னை விவசாயப்பத்திரிகை"யில் இதைப்பற்றி ஓர் வியாசம் தோன்றியிருக்கிறது. அதில் காணும் முக்கியமான பாகத்தை இங்குஎடுத்து பிரசுரிக்கிறோம்.



ஒரு ஏக்கரில் கருங்கண்ணிப்பருத்தி பயிரிடுவதில் சராசரியில் நேரிடும் செலவு :—

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| *6 ஜதை மாடுகளுக்கு ஜதை 1-க்கு ரூ 1-13-0 விதம் | | 10 | 14 | 0 |
| 10 ஆட்கள் ஆள் 1-க்கு 7 அணா விதம் | ... | 4 | 7 | 0 |
| 44½ பெண் சித்து 3 அணா விதம் | ... | 8 | 6 | 0 |
| 12 பவுண்டு விதை கிரயம் | ... | 0 | 12 | 0 |
| காவல் | ... | 0 | 13 | 0 |
| (மாதம் 10 ரூபாய் விதம் 1 ஆள் 4 மாதத்திற்கு; 1 ஆள் 50 ஏக்கர் பார்த்துக்கொள்ளக்கூடும்) | | | | |
| ஆட்டுக்கிடை மறிக்க | ... | 5 | 0 | 0 |
| தீர்வை | ... | 1 | 8 | 0 |
| கருவிகள் வாடகை | ... | 0 | 4 | 0 |
| வளரும் காலம்வரை போட்டமுதலுக்கு வட்டி | ... | 1 | 8 | 0 |
| மொத்தம் | ... | 33 | 8 | 0 |

* இதில் சில குறிப்புகள் சொல்லவேண்டியிருக்கின்றன.

உழுவதற்கு மாடுகள்:—சொந்தத்தில் வைத்திருந்தால் ஏற்படும் செலவைக்கொண்டே இங்கு கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆள்கள்:—உழுதல், விதை தெளித்தல் அறுவடை முதலிய எல்லா வேலைகளுக்கும் கூட்டியே சொல்லப்பட்டிருக்கிறது.

பெண்கள் :—களையெடுத்தல் முதலான பின் வேலைகளுக்கு காலப்பருத்தி எடுக்க 25, கோடைப்பருத்தி எடுக்க 11, இதர வேலைகளுக்கு பாக்கியுமாம்.

இந்தக் கணக்கின்படி சராசரியில் ஒரு ஏக்கரில் விளைவு காலத்தில் 3565 ராத்தலும், கோடையில் 89 ராத்தலுமாக மொத்த சுமார் 416 ராத்தலாக ஏனைய இதரசெலவுகள் நீங்க 1 ராத்தல் பஞ்சு விளைவிக்க 308 அணா செலவாவதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

* * *

நெய்யிலுள்ள ஜீவஸத்துப் பொருள்.— நெய், பாலிலிருந்து உற்பத்தியான பொருள். ஆனதுபற்றி, நெய்யிலுள்ள ஜீவஸத்துப் பொருளானது பாலிலுள்ள ஜீவ சத்துப்பொருளை முக்கியமாய்ப் பொருந்தி நிற்கும். பாலிலுள்ள ஜீவஸத்துப் பொருள் மாட்டின் ஆகாரம், அதன் வாசம், இவற்றைப் பொருந்தி நிற்கும் என்று சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்கள்.

நமது தேசத்தில் மேய்ச்சலுக்கு தகுந்த வசதிகள் இல்லாதபடியால், மாட்டின் ஆரோக்கியம குறைந்துபோய் அதன் பாலின் குணமும் கெட்டுப்போய்விட்டது. எருமைப்பாலும் அம்மாதிரியே. சாதாரணமாய் மெலிந்த பசு அல்லது எருமையிலிருந்து உற்பத்தியாகும் பாலிலிருந்து எடுக்கப்பட்ட நெய்யில் ஜீவஸத்துப் பொருள் எப்போதும் கம்மியே. அந்தப் பாலில் மிஞ்சி யிருக்கும் ஜீவஸத்துப் பொருளும், அதை காய்ச்சுவதினால் அழிந்துபோய் விடுகிறது.

ஆனதுபற்றி, ஜீவஸத்துப்பொருள் விஷயமாக யோசித்துப் பார்த்தால், நெய்யைவிட வெண்ணையே சிரேஷ்டம். சாதத்துடன் பச்சையாக பசு நெய் சேர்த்துக்கொண்டாவது சப்பாத்தியுடன் நெய் சேர்த்துக்கொண்டாவது சாப்பிடுவது, நெய்யில், லுச்சி, பூரி இவைகளை பொரித்து சாப்பிடுவதைக் காட்டிலும் நல்லது,

இப்போது, நெய்யில் எண்ணை முதலியன கலப்படம் அதிகமாக இருக்கிறது. இந்தியாவில் பெருத்த நகரங்களில் ஜனங்கள் சாப்பிடும் நெய் நெய்தானா என்று ஆச்சரியப்படும்படியாக விருக்கிறது. அதில் ஜீவஸத்துப்பொருள் இருப்பதாகக் கனவிலும் நினைக்கவேண்டியதில்லை. (ஆ. தீ.)

இந்தியாவில் வெள்ளைச் சர்க்கரை செலவு.— மொத்தச் செலவு 849000 டன், இந்தியாவில் உற்பத்தி 99,000 டன், இறக்குமதி 750,000 டன் இந்தியாவின் கரும்பு சாகுபடியின் விஸ்தீர்ணம், உலகசாகுபடியின் விஸ்தீர்ணத்திற்கு சற்றேறக்குறைய பாதியிருக்கிறது.



இங்கிலாந்தில் கிளி இறக்குமதிக்குத் தடை.— கிளி வியாதியென்ற ஒருவித வியாதி இங்கிலாந்தில் பெருவாரியாகப் பரவுவதால் இங்கிலாந்தில் கிளிகளையும் கிளி இனத்தைச்சேர்ந்த பறவைகளையும் இறக்குமதி செய்வதை பிரிட்டிஷ் சுகாதார மந்திரி தடுத்து ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். வைத்திய ஆராய்ச்சிக்காக வேண்டிய கிளைகளைமாத்திரம் அவற்றிற்கு நோயில்லையென்பதற்கான சர்ட்டிபிகேட் பெற்று வரவழைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும்.

கறவை மாடுகளுக்கு மூக்குக்கண்ணாடி:- ஒரு கோடைகாலத்தில் பசுக்கள் மேயும் நிலங்களில் புல் பூண்டுகள் வாடி வதங்கிவிட்டன. வதங்கிவிட்ட புல்லை மேயாமல் ஆடு மாடுகள் இளைத்து வந்தன. கடைசியில் மாட்டுக்காரன் ஒரு யுக்தி செய்து தன்னுடைய மாடுகளுக்கெல்லாம் பச்சைக் கண்ணாடிகள் வரவழைத்து மூக்குக்கண்ணாடிகள் போல் தயாரித்து மாட்டிவிட்டான். கண்ணாடி மூலமாகத் தரையைப் பார்த்து பச்சென்று இருந்தபடியால் மாடுகளெல்லாம் வாடிப்போன புல்லை நன்றாக மேய்ந்து நிறைய பால் கறந்ததாகக் கூறப்படுகிறது.

ஸோமனூரில் (கோயமுத்தூர் ஜில்லா) மாதுளை சாகுபடி:— இதைப்பற்றி ஓர் வியாசம் சென்னை விவசாயப் பத்திரிகையில் இருக்கிறது. அங்கு மாதுளை வைப்பதில் முதல் வருடம் 10 பழம் விதைபாவி நாற்றுவிட நாற்றங்கால் செலவு ரூ. 1-13-0 ம் 1 ஏக்கரில் 300 குழிவெட்டி கன்று ஊன்ற ரூ. 107-8-0-ம் ஆக ரூபாய் 109-5-0 ; 2-வது வருடம் கொத்தி தண்ணீர்விட ரூ. 70-ம் ; 3-வது வருடமும் அதேமாதிரி ரூ. 70-ம் இந்த 3 வருடத்திற்கும் தீர்வை ரூ. 7-8-0-ம் செலவு செய்யின் 4-வது வருடம் காய்ப்புக்கு வருகையில் ரூ 150 முதல் 200 வரை கிடைக்குமெனவும் ஆனால் இந்த வருடம் எருவிடவும், தண்ணீர்ப் பாய்ச்சவும் ரூ. 192-8-0 செலவாகுமென்றும், 5-வது வருடமுதல் அதேமாதிரி செலவிட வேண்டுமெனவும் ; ஆனால் காய்ப்பில் ரூ. 400 கிடைக்குமெனவும்; 6-வது வருடமுதல் ரூ. 600 வரை காய்க்கு மெனவும் ; ஆகவே இதுமுதல், வருடம் செலவுபோக வருமானம் ஒரு ஏக்கருக்கு ரூ. 400 வரை கிடைக்குமென சொல்லப்படுகின்றது.

**தேங்காய்.**— இம்முறை பேராதனையில் நடைபெற்ற கிருஷிக ஆலோசனைக் கூட்டத்தில் தேங்காய் என்னும் விஷயத்தின் பேரி லும் ஓர் பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன் சாரமாவது: தேங்கா யில் போஷணைக்குரிய கொழுப்பு அதிகமுண்டு. நல்லாய்ப் பழுத்த தேங்காயில் நூற்றுக்கு 60 வீதமாய்க் கொழுப்பு அமைந்திருக் கிறதென்பது பதார்த்த சாஸ்திரிகளின் மதிப்பு அரிசியிலே கொழுப்பு நூற்றுக்கு ஒன்று மாத்திரமேயாம். ஆகையால் அரிசி யோடு தேங்காய் சேர்ந்து உணவாகுமாயின் அதனாற் தேகத்துக்கு மிகுந்த நயமுண்டாகும். நம் சாதாரண உணவு அரிசியேயாதலின், அதனோடு தேங்காயைச் சேர்த்து உணவை ஆக்கிக்கொள்வது இலகுவாகின்றது. தேங்காயைத் தேடிக்கொள்வதுங்கஷ்டமல்ல. கீழ் நாட்டுச் சிங்களவர் தேங்காயை அதிகமாய்த் தின்பதினாலேயே நல்ல உரத்த தேகிகளாயிருக்கிறார்கள். இவர்களில் மிகுதியானோர் தென்னந் தோட்டக் கூலிச்சனங்களாயிருப்பதினால் இலகுவாய்த் தேங்காயை தேடிக்கொள்ளுகிறார்கள். அது அவர்களுக்கு ஒரு நல்ல அதிட்டம்போற் காணப்படுகின்றது. ஆனால் தென்னந் தோட்டங்களிற் கூலிவேலை செய்யப்போயிருக்குந் தமிழ்க் கூலிச் சனங்கள் அவர்களைப்போற் தேங்காயை அதிகமாய்த் தின்கிற தில்லை. அதனால் அவர்கள் திடமுள்ள தேகிகளாய்க் காணப்படு கிறதில்லை. நோயால் நராங்கிப் பலவீனராயிருக்கிறார்கள். தேங் காயின் மேன்மையை நல்லாய் அறிந்தவர்கள், ஐரோப்பியர், அமெ ரிக்கர், அவுஸ்திரேலியர், சேர்மனியரேயாம். உலகத்தில் இவர் களை யன்றி இதன் விசேஷத்தை இப்பொழுது அனுபவத்திற் கண்டறிந்த வேறு சாதியார் இலராம். தடிமற்சுரம், கசம், ஆகிய நோய்கள் தேங்காய் உணவை அதிகமாய் உண்பவர்களிற் பெலங் கொள்ளாவாம்.

---


# ரோஜாத் தோட்டம்.

(P. S. பார்த்தசாரதி ஐயங்கார் எழுதியது.)

இதில் ரோஜாச் செடியை பதியன் மூலமாயும் சிறு குச்சி கள் நடுவதாலும் வளர்ப்பதையும், அதற்குப்போடும் எரு விவரத் தையும், அதற்கு உண்டாகும் வியாதியையும், நிவர்த்தியையும் பெரிய பூ, வாசனைப் பூ, நிறமுள்ள பூ, உண்டாக்கும் வகையும், பன்னீரும், அத்தரும் செய்யும் முறைகளுடன் விளக்கப்பட்டிருக் கிறது. வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும். விலை 4 அணா.

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

---

# "யாதவமித்ரன்"

இது யாதவமக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் ஓர் மாதாந் தரப் பத்திரிகை. இதில் கல்வி, பொருளாதாரம், ஆசார சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப்பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு மாதம் ஒருமுறை வெளிவருகின்றது.

எல்லா யாதவமக்களும் உடனே சந்தாதாரராய் சேரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா விபரம்,

உள் நாட்டிற்கு வருஷம் 1-க்கு ரூ. 1—0—0

பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டிற்கு
வருஷம் 1-க்கு ரூ. 1—8—0

யாதவமித்ரன் ஆபீஸ்,
ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்கு சித்திரை வீதி, மதுரை.

# இந்திய விவசாயம்.

## ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

பயிர்ச் செய்கை, பிருதிவி லட்சணம், தாவர சாஸ்திரம், கால்நடை பரிபாலனம், பயிர்களுக்கு கெடுதியுண்டாக்கும் புழு பூச்சிகள், நோய்நொடிகள், ரசாயன சாஸ்திரம், தேனீவளர்த்தல், பட்டுப்பூச்சிவளர்த்தல், கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், கூட்டுறவு இவைகளைப்பற்றிய விஷயங்கள் தக்கவர்களால் எழுதப்பட்டுவரும்.

வருட சந்தா தபாற்கூலியுள்பட ரூ. 1—0—0

போஷகருக்கு ரூ. 5—0—0

(1) பிரதி இங்கிலீஷ் 15-ம் தேதி வெளிவருவது.

(2) ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(3) சந்தாத் தொகையை முன்னுடியே செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் செலுத்தியாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பு:—வி. பி. யில் அனுப்பப்படுபவைகள் யாவும் "ரிஜிஸ்தர்" செய்தே அனுப்பவேண்டியதாக விருப்பதால் அதற்காக அணா 2 பிரத்தியேகமாகச் செலுத்த வேண்டியதாகிறது. ஆதலால் சந்தாத் தொகையை மணியார்டர் மூலமாக அனுப்புவதால் தங்களுக்கு 2 அணா லாபமாவதைக் கவனிக்கவும்.

(1) சந்தா நேயர்கள் கடிதம் எழுதுகையில் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டியது.

(2) சஞ்சிகை 1920-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தொடங்கிப் பிரசுரிக்கப்படுகிறது.

வருட மத்தியில் சேருகிறவர்களுக்கு முன் சஞ்சிகையில் எல்லாம் அனுப்பப்படும்.

இதை மாதிரிப் பிரதியாகப் பெற்றவர்கள் நமது பத்திரிகை லாபத்தைக்கருதி பிரசுரிக்கப்படாமல் நமது தமிழ் நாட்டின் கிருஷிகரின் அபிவிருத்தியைக் கருதியே பிரசுரமாகி வருகின்றதென்பதை உணர்ந்து, பத்திரிகை அனுப்பவேண்டாமென எழுதிவிடாது, தாங்களும் இதற்குச்சந்தாதாரராகச்சேர்ந்து, தமது நண்பர்களும் சேரும்படியாகச் செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

விளம்பர விகிதங்களுக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்,

**'இந்திய விவசாயம் ஆபீஸ்,'**

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சிறுப்பள்ளி.

Printed at Sri Nilayam Press, Trichinopoly.